www.tamilarangam.net

# பசுத்தோல் போர்த்திய சுவிஸ் புலிகளின் வேஷம்கலைகிறது.

## *சிறுத்தைகளின் காமப்பசிக்கு நேற்றுவரை குடும்பப் பெண்கள் இன்று சிறுமி நாளை....?*

அன்று புலிகளின் சுவிஸ் பொறுப்பாளர் முரளிதரன் தொடங்கி இன்று புலிகளின் சுவிஸ் பிரதிநி இளங்கோ வரை தமது காம இச்சையால் நடத்திய வெறியாட்டத்தில் எத்தனை குடும்பங்களில் பிரிவு, குழப்பம், சோகம் இதன் தொடர்ச்சியாக இன்று ஓர் அப்பாவியின் உயிர்பறிப்பும், சிறுமியின் மானம்பறிப்பும்.

புலிகளின் முன்னைநாள் சுவிஸ் பொறுப்பாளர் முரளிதரன் மீது குற்றம் சாட்டிய பல புலி உறுப்பினர்களில் ஒருவரான சூர்மாவட்ட பொறுப்பாளர் அல்பேர்ட்டின் மனைவி உட்பட பல பெண்களுடன் (பெண்களின் விருப்பத்துடன்) முரளி பாலியல் உறவுவைத்திருந்தார் என்பது புலிகள் அறிந்தும் அம்பலப்படுத்தாத செய்தி. மற்றும் பெண்கள் அனைவரது விபரத்தையும் பகிரங்கப்படுத்துவதன் மூலம் பல குடும்பங்களில் மேலும் பல பிரச்சனைகள் உருவாகலாம் எனும் காரணத்தால் தவிர்த்துக்கொள்கின்றோம்! அதுமட்டுமல்லாது ஈழத்தில் உரிமை வேண்டி போராடிப்பலியாவோரின் மரணங்களை படம்பிடித்துகாட்டி புனர்வாழ்வு, பாதுகாப்பு என வெளிநாடுகளில் சேர்த்த பணத்தில் பெரும்பகுதியை முரளி கையாடிதையும் புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை ஏன்?. குற்றங்களை பகிரங்கமாக அறிவிக்காமல் அவர்களாலேயே குற்றவாளி எனக் கூறப்பட்டது எதற்கா? முரளி இப்போ எங்கே? என்பதுடன் அவரின் (புலிகளின்) அடாவடித்தனங்கள் போன்றவை உட்பட எவற்றையும். தேசபக்தர்கள் பெரிதாகக் கேட்டுதாக இல்லை காரணம் என்னவோ? கேட்டால் போராட்டம் பாதிக்கப்பட்டுவிடும் என்பார்கள் தேசபக்தர்கள். இவர்களின் இச்செயல்களால் பாதிப்பில்லையா?

இதுமட்டுமா? சூரிச்சில் தமிழ் குடும்பப் பெண் ஒருவருடன் புலிகளின் சூரிச் அலுவலக பிரதிநிதிகளான அச்சு, பாபு, ராஜி என்பவர்கள் வைத்திருந்த தரம்கெட்ட நடத்தைக்கு மறைமுகமாக உதவிடும் நோக்குடன் செயற்பட்ட புலிகளின் செய்தி வாசிப்பாளர் மஞ்சு மற்றும் இவரது நண்பர்களினதும் கேவலமான நடத்தையால் ஏதுமறியாத ஸ்ரீதரன் என்ற இளைஞன் கடந்தவாரம் (26.08.98) கொல்லப்பட்டான். கொலைசெய்த காமவெறியர்கள் தங்கள் குற்றம் முழுவதையும் அந்த இளைஞன் மீது சுமத்தவும் முற்பட்டுள்ளார்கள் என்பதை யாவரும் அறிவார்கள். புலிகளின் உறுப்பினர்களால் கொல்லப்பட்டவனின் உயிரை புலிகளால் திருப்பிக் கொடுக்க முடியுமா? அவன் குடும்பத்தார்க்கு புலிகள் கூறும் பதில் என்ன?

சுவிஸ்புலிகளின் காமவெறியாட்டத் தொடர்ச்சியில் இன்று பத்து வயது தமிழ் சிறுமி பலியாகியுள்ளார். கடந்த 30..09.98 புலிகளால் சூரிச்சில் நடாத்தப்பட்ட தமிழ சிறுவர்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகளில் அணிவகுப்புப் பிரிவுக்கு பயிற்சி அளிப்பதில் ஈடுபட்டிருந்த புலிகளின் அலுவலகம், கோயில், பாடசாலை ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் பிரதிநிதி இளங்கோ என்பவர் (குடும்பஸ்த்தர்) அப்பிரிவில் பயிற்சி பெற்ற பத்துவயது சிறுமியை தனது பாலியல் இச்சைக்கு பலியாக்கினார் என்னும் வெக்கக்கேடான உண்மையை பகிரங்கப்படுத்துவதில் நாம் மனம் வருந்துகின்றோம். சுவிஸ்புலிகளின் மகளீர்அணி இந்த மனிதர்களுடைய செயல்களை கண்டுகொள்வதில்லைப் போலும் ஏன்?

தேசபக்தர்களாக வேசம் போட்டுக்கொண்டு தமது குடும்பத்தார் அனைவரையும் வெளிநாடுகளில் தங்கவைத்து விட்டு களியாட்ட கொண்டாட்டங்களில் கலந்துகொண்டும். வதிவிட உரிமைகளைப் பெற்றுக்கொண்டும். வட்டிக்கு கொடுத்தும், சீட்டுப்பிடித்தும் எமது தாயகத்தில் விடுதலையின் பெயரால் இளம் சமுதாயத்தை மரணத்திற்குள் தள்ளிவிட்டு அவற்றை இங்குள்ள தமிழர்களிடம் உணர்வுபூர்வமாக பிரச்சாரம் செய்து பணத்தை பறித்துக்கொண்டும் வாழ்க்கைநடத்தும் வெளிநாட்டுப்புலிகள்(சுவிஸ்). ஸ்ரீலங்கா அரசுக்கு நிகராக பல சமூகவிரோத செயல்களிலும், காமவெறியாட்டங்களிலும் தமிழர் மத்தியில் இன்றுவரை ஈடுபட்டுவருகிறார்கள்.
இவற்றையெல்லாம் புலிக்கு பணம் கொடுப்பவர்கள், வக்காலத்து வாங்குபவர்கள் ஏன் கண்டுகொள்வதில்லை கண்டிப்பதில்லை. ஓ போராட்டத்தில் இதுவெல்லாம் சகசமோ? நீங்கள் கேட்கமாட்டீர்கள ஏன் என்றால் மாயைக்குள் உட்பட்ட பக்தர்களாச்சே.!

**மக்களே! சிந்தியுங்கள்!!**

சிங்கள அரசால் பாதிக்கப்பட்டவர் வாழ்க்கையில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள். இவர்களின் செயல்களால் எத்தனை பேர் நிம்மதி இழந்துள்ளார்கள் தெரியுமா?
இந்த அக்கிரமங்களை தட்டிக்கேளாது, எதிர்த்துக் குரல்கொடுக்காது தொடர்ந்தும் நீங்கள் மௌனிகளாய் இருப்பிர்களேயானால் இந்தப் பயங்கரங்கள் உங்கள் வீட்டுக்கதவையும் தட்ட காலமாகாது.

இவர்கள் மட்டுமல்ல யார் எமதினத்திற்கு துரோகம் செய்தாலும் தட்டிக்கேளுங்கள்.

**நேற்று அவர்கள்! இன்று நாங்கள்!! நாளை நீங்கள்!!!**

புரட்டாதி 98 — தகவல்
பிரசுரம் 1 — மக்கள் நலன் விரும்பிகள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்